Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 212/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | அல்லா பாஷா |
| Father's Name | -- | கமால்பாய் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோவையில் குடியிருந்துவருகிறேன். நான் சமையல் வேலை பார்த்துவருகிறேன். கடந்த 24.07.2016 நாள் காலை சுமார் 11 மணியளவில் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக பட்டியல் சாட்சி 4 ரமேஷ் என்பவர் மூலமாக தகவல் கிடைத்தது. நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்று என் மகனை பார்த்தேன். சிகிச்சை பலனின்றி எனது மகன் இறந்துவிட்டார். நான் பிரேத விசாரணையின்போது உடன் இருந்தேன். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

நான் விபத்து பற்றி தொலைபேசியில் தகவல் கிடைத்தவுடன் உடனடியாக சென்றுபார்த்தேன். நானும் எனது உறவினர்கள் மற்றும் இறந்துபோனவரின் நண்பர்களுடன் அடிபட்டிருந்தவர்களை பார்க்க வந்தேன். அசா.1 முதல் 4 வரை என்னுடன் வரவில்லை. அவர்கள் என்னுடன்தான் வந்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோதியது எம்எம் எஸ் பேருந்து என்று கேள்விபட்டேன்.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 212/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | கதிஜா பீபி |
| Father's Name | -- | அல்லாபாஷா |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோவையில் குடியிருந்துவருகிறேன். கடந்த 2016ம் வருடம் ஒரு நாள் எனது மகன் ஜான் பாட்ஷா அவரது நண்பர்கள் 4,5 பேருடன் வண்டியில் சென்றார். பேருந்து அவரது வாகனத்தின் மீது மோதி அவருக்கு அடிபட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிசையில் இருப்பதாக அசா.1 தமிழரசு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தார். நானும் எனது கணவர் அசா.4ம் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்று பார்த்தோம். பிரேத விசாரணையின் போது உடன் இருந்தோம். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

. நானும் அசா.4 ம் எங்கள் உறவினர்களும், எனது மகனின் நண்பர்களும் ஒன்றாகத்தான் மருத்துவமனை சென்று பார்த்தோம் என்றால் சரிதான். அசா1 முதல் 4 வரை எங்களுடன் வரவில்லை . அவர்கள் எங்களுடன்தான் வந்தார்கள் என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி